செ.வெ.எண்:  24　　　　　　　　　　　　　　　நாள்:  17.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி, மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கற்கும் பாரதம் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் 15 வயதிற்கு மேல் 80 வயதிற்குள் எழுதபடிக்க தெரியாதவர்கள் அனைவருக்கும் 19.03.2017 அன்று அடிப்படை எழுத்தறிவு தேர்வு நடைபெறவுள்ளது. இத்தேர்வில் அரியலூர் மாவட்டத்தில் 5807 பயனாளிகள் தேர்வு எழுத உள்ளனர். இத்தேர்வில் நான்கு ஒன்றியங்களில் உள்ள அந்தந்த ஊராட்சி ஒன்றிய தொடக்கபப்ள்ளி / நடுநிலைப்பள்ளிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெறும். இத்தேர்வினை கற்கும் பாரத மையத்தில் படித்தவர்களும், மையத்தில் படிக்காத மற்ற கல்லாதவர்களும் இத்தேர்வினை எழுதலாம். மேலும், கடந்த முறை நடந்து முடிந்த தேர்வுகளில் தேர்ச்சி பெறாதவர்களும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.